இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 101 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 05 – வெள்ளிக்கிழமை 21 நவம்பர் 2025 – வெளியூர் 12 + 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 101: Thiruvalluvar Year - 2056 - Karthigai 05 - Friday 21 November 2025 - Dak 12 +12 Pages ₹ 5.00

## நீதிக்கட்சியின் நீட்சியே ‘திராவிட மாடல்’ ஆட்சி!

# சூழும் ஆரிய சூழ்ச்சிகளை சுக்குநூறாக உடைத்தெறிவோம்!

## நீதிக்கட்சி தொடக்க நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.11.2025) தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித் துறை சார்பில் கடலூர், விழுப்புரம், திருப்பத்தூர், அரியலூர், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களிலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 59 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர்கல்வித் துறை செயலாளர் பொ.சங்கர், கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, நவ.21-**

**நீதிக்கட்சியின் நீட்சியே ‘திராவிட மாடல்’ ஆட்சி என்றும், சூழும் ஆரிய சூழ்ச்சிகளை சுக்குநூறாக உடைத்தெறிவோம் என்றும் நீதிக்கட்சியின் துவக்க நாளையொட்டி நேற்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சூளுரைத்துள்ளார்.**

‘நீதிக்கட்சி’ என்று பரவலாக அறியப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தொடங்க முடிவு செய்யப்பட்ட நாள் 20.11.1916.

மான்டேகுசெம்ஸ்போர்டு திட்டத்தின் கீழ் இரட்டை ஆட்சி என்ற ஒன்று அமல்படுத்தப்பட்டது. இந்த இரட்டை ஆட்சித் திட்டம் சில இடங்களில் சரிவர இயங்கவில்லை. ஆனால் சென்னையில் இந்த ஆட்சி முறைக்கு வெற்றி கிடைத்தது எனலாம்.




ஏனென்றால் வேறு எந்த மாகாணத்திலும் காணப்படாத ஒரு சமூக நிலை சென்னை மாகாணத்தில் காணப்பட்டது. இங்கு அரசாங்க அலுவல்களிலும், வேறு பல பொதுப் பணிகளிலும் உயர்மட்டத்தில் பிராமணரே இடம் பிடித்திருந்தனர். மொத்த மக்கள் தொகையில் பிராமணர்கள் நூற்றுக்கு மூன்று பேர்களே இருந்தனர். ஏனையோர் 97 பேர்களாக இருந்தும் அவர்களுக்குப் போதிய அளவு அரசாங்கப் பணிகளில் இடம் கொடுக்கப்படவில்லை. அவர்களுடைய படிப்பும் குன்றியிருந்தது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாட்டில் இருந்த வழக்கறிஞர்கள், டாக்டர்கள், எஞ்சினீயர்கள் ஆகியோரில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் பிராமணர்களாகவே இருந்தனர். இத்தகைய நிலையில் ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் பெற்றால் பிராமணர்களின் ஆதிக்கமே பெருகும் எனப் பிராமணர்கள் அல்லாதவர்கள் எண்ணினர்.

சோழர் காலத்திலும், விசயநகரத்துப் பேரரசர் காலத்திலும், நாயக்கர் காலத்திலும் ஆட்சியிலும், சமயத் தலைமையிலும் அமர்த்தப்பட்டிருந்த பிராமண சமூகம் ஆங்கிலேயர் ஆட்சியிலும் அந்த இடங்களைப் பிறருக்கு விட்டுக் கொடுக்கவில்லை. ஆரிய வழக்கின்படி மக்கள் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு வருணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் பிராமணர் என்றும், பிராமணர் அல்லாத ஏனையோர் அனைவரும் சூத்திரர் என்றும் இருவிதப் பிரிவினராக மட்டுமே பிரிக்கப்பட்டனர்.

பொதுவாகப் பிராமணர் அல்லாதோர் சமுதாயத்தில் தாழ்வாக மதிக்கப்பட்டனர். இதன் காரணமாகச் சென்னையில் 1916 நவம்பர் 20ஆம் நாள் பிராமணர் அல்லாதார் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. இதில் தென்னிந்தியநல உரிமைச் சங்கம் என்று ஓர் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. அதுவே நீதிக்கட்சி என்று அறியப்பட்டது.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

### ஒரு மாநிலத்தில் இரண்டு அதிகார மையங்கள் இருக்க முடியாது!

## ஆளுநர் மசோதாக்களை நிறுத்திவைப்பது கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது!

### உச்சநீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

*புதுடெல்லி, நவ.21-*

மசோதாக்களை நிறுத்திவைப்பது கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது என்று 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்துள்ளது. ஒரு மாநிலத்தில் இரண்டு அதிகார மையங்கள் இருக்க முடியாது என்றும் உச்சநீதிமன்றம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.



மசோதாக்கள் மீது ஆளுநர் குறிப்பிட்டகால வரம்புக்குள் உரிய முடிவு எடுக்கவில்லை என்று தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில், கடந்த ஏப்ரல் 8ம் தேதி உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆளுநர் காலம் தாழ்த்தியது சட்டவிரோதமானது என்றும், அவர் தாமதப்படுத்திய மசோதாக்கள் முன்தேதியிட்டு நிறைவேறியதாகக் கருதப்படும் என்றும் அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி தீர்ப்பளித்தது. மசோதாக்கள் மீது ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவர் மூன்று மாதங்களுக்குள் முடிவெடுக்க வேண்டும் எனவும் காலக்கெடு விதித்தது.

**நான்காவதாக எந்த வாய்ப்பும் இல்லை!**

இந்த தீர்ப்பு குறித்து குடியரசுத் தலைவர் 14 கேள்விகளை எழுப்பி உச்சநீதிமன்றத்திற்கு கடிதம் அனுப்பினார். இந்த வழக்கில் 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு இன்று முக்கிய தீர்ப்பை வழங்கியுள்ளது. ஆளுநர் காரணத்தை தெரிவிக்காமல் நீண்ட காலம் மசோதாவை நிறுத்திவைப்பது கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரானது என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## விவசாயிகளின் நலனுக்காக வைத்த ‘நெல் ஈரப்பத தளர்வுக் கோரிக்கை’ நிராகரிப்பு!

# தமிழ்நாட்டுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு அடுத்த துரோகம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, நவ.21-**

**“நெல் கொள்முதலில் ஈரப்பத தளர்வுக் கோரிக்கையை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிராகரித்து தமிழ்நாட்டுக்கு அடுத்த துரோகத்தைச் செய்துள்ளது கண்டிக்கத் தக்கது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.**

நெல் கொள்முதலில் ஈரப்பதம் தளர்வு தொடர்பான தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஒன்றிய அரசு நிராகரித்துள்ளது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

உழவர்களிடையே பிரதமர் உரையாற்றிய ஈரம் காய்வதற்குள் அடுத்த துரோகம்!

கோவைக்கான மெட்ரோ ரயில் திட்டத்தை நிராகரித்துவிட்டு, அதே கோவைக்கு எந்தவிதமான உறுத்தலும் இன்றி பிரதமர் வந்து சென்ற ஈரம்கூட இன்னும் காயவில்லை; அதற்குள் நெல் கொள்முதலில் ஈரப்பதம் தளர்வு தொடர்பான நமது கோரிக்கையை நிராகரித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

கனமழை காரணமாக ஈரப்பதம் அதிகமாகியுள்ள நெல்லினைக் கொள்முதல் செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டின் குரல் ஏன் பிரதமரின் காதுகளுக்குக் கேட்கவில்லை? விவசாயிகளின் அழுகுரல் ஏன் கேட்கவில்லை? கண்ணீர் ஏன் தெரியவில்லை?

கடந்த ஆண்டுகளில், தமிழ்நாடு அரசின் கோரிக்கைகளின் அடிப்படையில், இத்தகைய ஈரப்பத அளவிற்கான தளர்வைப் பலமுறை வழங்கிய ஒன்றிய அரசு தற்போது வழங்க மறுப்பது ஏன்?

**மறுபரிசீலனை செய்க!**

கன மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்குக் கோரப்பட்ட நிவாரணமும் அளிக்காமல், ஈரப்பத அளவையும் அதிகரிக்காமல்இருப்பதுவிவசாயிகளுக்கு எந்தவிதத்தில் நன்மை செய்யும் என நினைக்கிறீர்கள்?

உடனடியாக இவற்றை மறுபரிசீலனை செய்வதோடு, தமிழ்நாட்டின் கோரிக்கைகள் மீது நல்லதொரு முடிவெடுத்து வேளாண் பெருங்குடி மக்களுக்கு ஒன்றிய அரசு நன்மை செய்யும் என நம்புகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.